செ.வெ.எண்: 54 நாள்: 25.10.2021

**தமிழ்நாடு அரசு**
**பள்ளிக்கல்வித் துறை – நாகப்பட்டினம் மாவட்டம்**
**“இல்லம் தேடிக் கல்வி”**

**பத்திரிகைச் செய்தி**

**இல்லம் தேடிக் கல்வி:**

கொரோனா பெருந்தொற்றுப் பொது முடக்க காலங்களில், அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி இழப்புகளைக் குறைத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு “இல்லம் தேடிக் கல்வி” என்கிற திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:**

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சார்ந்த பொதுமுடக்கக் காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளைச் சரிசெய்தல். பள்ளி நேரத்தைத் தவிர, மாணவர்கள் வசிப்பிடம் அருகே சிறிய குழுக்கள் மூலம் தன்னார்வலர்களின் பங்கேற்புடன் மாணவர்களுக்குக் கற்றல் வாய்ப்புகளை வழங்குதல். மாணவர்கள் பள்ளிச் சூழலின் கீழ் ஏற்கனவே பெற்றுள்ள கற்றல் திறன்களை “இல்லம் தேடிக் கல்வி” திட்டச் செயல்பாடுகளின் வாயிலாக மீண்டும் வலுப்படுத்துதல்.

தன்னார்வலர்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்க குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதைப் போலவே 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்க குறைந்தபட்ச கல்வித் தகுதியாக இளங்கலை பட்டப் படிப்பு (Any Degree) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இல்லம் தேடி திட்டத்தில் பணிபுரிய விருப்பம் உள்ள தன்னார்வலர்கள் தங்கள் விவரங்களை illamthedikalvi.tnschools.gov.in என்ற இணைய தளத்தில் சென்று Voluntary Registration என்ற பட்டனை click செய்து பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**